# இலங்கை பத்திரிகை மன்றம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பத்திரிகை மன்றத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றம் நடாத்திச் செல்லப்பட்ட பழைய கட்டிடத்திற்கான வாடகை உடன்படிக்கை 2011 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்திருந்த போதிலும் அதற்குரிய ஒரு மாதத்திற்கான வாடகை வைப்பான ரூபா 125,000 தொகையிலிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 58,234 மீதியினைக் கழித்ததன் பின்னர் பெறவேண்டியிருந்த ரூபா 66,766 மீதியினை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பத்திரிகை நிறுவகத்திடமிருந்தும் ஏனையவர்களிடமிருந்தும் பெறப்பட வேண்டியிருந்த ரூபா 77,900 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

5 கொடுப்பனவுச் சந்தர்ப்பங்களிற்குரிய ரூபா 277,409 மொத்தப் பெறுமதிக்கான செலுத்துகைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டு, விலைமனுக் கோரல்கள் போன்ற எழுத்துமூலமான சான்றுகள் இன்மை காரணமாக அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2010 மே 14 ஆந் திகதிய சீஈ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக கடிதத்தின் 1 ஆம் பந்தி | அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற சகல நிறுவனங்களினதும் அலுவலகங்கள் முடியுமான வரை அரசாங்க மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களிற்கு சொந்தமான கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுதல் வேண்டும் என்பதுடன் விசேடமான நிலைமைகளின் கீழ் மாத்திரம் தனியார் கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க மதிப்பீட்டிற்கமைய அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறெனினும் 2011 திசெம்பர் 29 ஆந் திகதியிலிருந்து மன்றத்தின் அலுவலகம் இயங்குகின்ற தனியார் துறைக்குச் சொந்தமான கட்டிடத்தினை வாடகைக்கு எடுப்பது தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இது தொடர்பில் மன்றத்தின் தலைவரினால் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.<br><br>"மன்றத்திற்கு கட்டிடமொன்றைத் தேடிக்கொள்வதற்கு செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்களை செய்வதற்கு முன்னர் அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசாங்க |

கட்டிடமொன்றைத் தேடிக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் காணப்படுகின்றனவா என பரீட்சிக்கப்பட்டது. அவ்வாறான கட்டிடமொன்று இல்லாமையால் தனியார் கட்டிடமொன்றைப் பெறவேண்டி ஏற்பட்டிருந்தது''.

### 1.2.4 போதிய அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வெளியிடப்பட்ட ரூபா 13,425,100 இற்குரிய 42 நாட்குறிப்புப் பதிவுகளிற்கான உரிய அங்கீகாரத்துடன் நாட்குறிப்புப் பதிவுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வெகுசனத் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியினை நடாத்தியமையால் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 234,000 பாடநெறிக் கட்டணம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மன்றத்தின் செயற்பாட்டு நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 14,877,363 பற்றாக்குறையொன்றானதுடன் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ரூபா 14,000,000 மானியத்தின் பின்னர் அது ரூபா 877,363 பற்றாக்குறையொன்றாகியது. அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 13,445,045 பற்றாக்குறையொன்றானதுடன் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ரூபா 12,556,000 மானியம் காரணமாக அது ரூபா 889,045 பற்றாக்குறையொன்றானமையால் மீளாய்வாண்டின் நிதி

விளைவுகளில் ரூபா 11,682 முன்னேற்றத்திற்காக அரசாங்க மானியம் ரூபா 1,444,000 இனால் அதிகரித்திருந்தமை செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியிலான நிதி மீளாய்வு

---

1973 இன் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை மன்ற அதிகாரச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இம் மன்றத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களில் கடந்த பல வருடங்களாக செய்திப்பத்திரிகைகளை பதிவு செய்தல் மாத்திரமே இடம்பெற்று வந்திருந்தது. இருந்த போதிலும், இந் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக ஊழியர் வேதனாதிகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் ரூபா 5,431,396 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. ஆயினும் செய்திப்பத்திரிகைகளைப் பதிவு செய்ததினால் கிடைத்த வருமானம் ரூபா 61,350 மாத்திரமேயாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

## 3.1 செயலாற்றுகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த 06 செயற்பாடுகள் முழுமையாகவே நிறைவேற்றப்படாதிருந்ததுடன் செய்திப்பத்திரிகை கலைத்துறையில் சங்கங்களை பதிவு செய்வதற்கான செயற்பாடானது ஒரு சங்கத்தினை பதிவுசெய்தலுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மன்றத்தின் தலைவரினால் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

''குறித்த செயற்பாடுகளில் அனேகமானவை இரண்டாம் தரப்பினர்களின் கோரிக்கைக்கு அமையவே இடம்பெறுகின்றது. இலங்கை பத்திரிகை மன்றத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சில பணிகளை ஒத்த பணிகள் ஊடக தகவல் அமைச்சினாலும் அரசாங்க தகவல் திணைக்களத்தினாலும் முன்னெடுக்கப்படுகின்றன. இது வரையில் இலங்கை பத்திரிகை மன்றம்

செய்திப்பத்திரிகை கலைத்துறையில் 100 சங்கங்களிற்கும் மேல் பதிவுகளை மேற்கொண்டுள்ளது. அதிகளவான சங்கங்கள் இது வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் புதிய சங்கங்களை பதிவுசெய்தல் மாத்திரம் இடம்பெற்று வருகின்றன''

(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத நோக்கங்கள்

---

மன்றத்தினை தாபித்தலிற்குரிய அதிகாரச்சட்டத்தின் 8(6) ஆம் பந்தியின் ஏனைய விடயங்களிற்கு அப்பால் செய்திப்பத்திரிகைப் பயன்பாடு மற்றும் செய்திப்பத்திரிகைகளின் தேவைப்பாடு மீதான ஆராய்ச்சியினை நடாத்தல், பொது நலனிற்கான புதிய நிலைமையொன்றை மீளாய்வு செய்தல் மற்றும் அவை தொடர்பில் பொருத்தமான நிவாரண நடவடிக்கைகளை முன்வைத்தல் மன்றத்தின் பிரதான நோக்கங்களாகும். இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த செய்திப்பத்திரிகை வாசகர் ஆராய்ச்சியானது ஆரம்ப ஒழுங்குசெய்தல் நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மன்றத்தினை தாபித்தலிற்கான அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவிலுள்ள ஏனைய விடயங்களிற்கு மேலாக பொய்யான, மானக்கேடான மற்றும் பண்பாடற்ற விடயங்களை செய்திப்பத்திரிகைகளில் வெளியிடுதல் குற்றம் ஒன்றாவதுடன் அவ்வாறான குற்றங்களைப் புரிபவர்கள் தண்டனைக்கு உட்படுவர். இருப்பினும், நாட்டில் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வாறான செய்திகள் தொடர்பில் ஆய்ந்தறிந்து குற்றவாளிகளை நிதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கு மன்றத்தில் காணப்படும் முறைமை போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. இச்செயற்பாட்டிற்காக சிங்கள மொழி மூலம் மாத்திரம் வெளிவருகின்ற பிரசுரங்கள் தொடர்பில் தற்போதைக்கு ஒரு புலனாய்வு உத்தியோகத்தர் மாத்திரமே மன்றத்தில் உள்ளார்.

இது தொடர்பில் மன்றத்தின் தலைவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

“இந்த செய்திப் பத்திரிகைகள் விற்பனை செய்யப்படுகின்ற புறக்கோட்டை, மருதானை மற்றும் ஆமர்வீதி ஆகிய இடங்களிற்குச் சென்று செய்திப்பத்திரிகைகளைக் கொள்வனவு செய்வதில் சிரமம் காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மன்றத்தின் ஆரம்ப மட்டத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவரை அதற்காக ஈடுபடுத்தி செய்திப்பத்திரிகைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.”

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிப்புரைகளின் படி குறித்த பத்திரிகைகளின் உரிமையாளர்களினால் சுயவிருப்பத்துடன் பதிவிற்காக விண்ணப்பிப்பதன் அடிப்படையில் மாத்திரம் பதிவு செய்தலும் அதன் பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை 165 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) மன்றத்தினால் 2010 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு வெகுசனத்தொடர்பு டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறியொன்று நடாத்தி வரப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக பின்வரும் முகாமைத்துவ பலவீனங்களை காண முடிந்தது.

I. மீளாய்வாண்டில் பாடநெறிகளிற்காக செய்யப்பட்ட செலவினம் ரூபா 823,655 ஆகக் காணப்பட்டதுடன் வருமானம் ரூபா 245,500 ஆனமையால் பாடநெறிகளை நடாத்தியமையால் ரூபா 578,155 மன்றத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

II. 2011 மார்ச் 10 ஆந் திகதி தொடங்கப்பட்டு 2011 செப்தம்பர் 08 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்ட ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறிக்காக 35 மாணவர்கள் பங்குபற்றியிருந்ததுடன் பாடநெறிக் கட்டணமாக ரூபா 525,500 மாத்திரம் அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 82,500 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விலைமனுக்களைக் கோராது 2011 இன் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி கூடத்தினை நிர்மாணிப்பதற்காக செலசினே நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 532,077 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 பெப்ரவரி மாதத்தில் கண்டியில் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பிரதேச ஊடகவியலாளர் செயலமர்வினை அத்திகதியில் நடாத்த முடியாது என கண்டி மாவட்ட மேலதிகச் செயலாளரினால் பத்திரிகை மன்றத்திற்கு அறிவித்திருக்கையில் அதனைக் கருத்திற்கொள்ளாது செயற்பட்டிருந்தமை காரணமாக செயலமர்வினை நடத்தாது ரூபா 14,497 தொகையான பயனற்ற செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.4 பதவியணி நிர்வாகம்

மன்றத்தினை தாபித்தலிற்கான அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருக்க வேண்டிய பத்திரிகை ஆணையாளர் பதவிக்கான செயற்பாடுகள் 2010 மார்ச் 31 ஆந் திகதியிலிருந்து அவ்வப்போது அமைச்சின் பரிந்துரையின் மீது நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் பதிற்கடமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக முழுநேர அடிப்படையில் காணப்பட வேண்டிய நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி நீண்டகாலமாக பதிற்கடமை அடிப்படையில் காணப்பட்டது. அவ்வாறே 2006 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மன்றத்தின் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறையினைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக ஆரம்பத்திலிருந்தே மன்றத்தின் அங்கீகரித்த பதவியணியின் 6 பிரதான பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

# 04. கணக்களித்தன்மை மற்றும் நல்லாட்சி

## 4.1 முகாமைத்துவச் சபையின் கட்டமைப்பு

---------------------------------------------------------------

மன்றத்தினை தாபித்தலிற்கு உரித்தான 1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை மன்ற அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் அதன் பணிப்பாளர் சபையினை நியமித்தல் சம்பந்தமாக எழுந்துள்ள பின்வரும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்காக தேவையான திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) தீர்மானமெடுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள மன்றத்தின் உறுப்பினர்களுக்காக முகாமைத்துவம், நிதி, நிர்வாகம், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் மீதான நிபுணத்துவ அறிவுபடைத்த திறைசேரிப் பிரதிநிதிகளை நியமிப்பதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் காணப்படாமை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (ஆ) பந்தியின் படி சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவர் செய்திப்பத்திரிகை வணிக ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவராக காணப்பட வேண்டும் என்பதுடன் அந்த ஊழியர்களின் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு தொழிற்சங்கத்தினாலும் முன்மொழியப்பட்ட மூவருக்கு மேற்படாத இணக்கப்பாட்டுச் சபையிலிருந்து அவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான நபர் ஒருவர் முன்வராதிருப்பின் அவ் வெற்றிடத்தினை எவ்வாறு நிரப்புவது என அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்படாதுள்ளமை.

## 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

-----------------------------------------------

2011 ஆம் ஆண்டிற்காக மன்றத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது சம்பந்தமாக பின்வரும் பலவீனங்களை அவதானிக்க முடிந்தது.

(அ) நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்றத்தினால் தற்போதைக்கு அர்ப்பணிப்புடன் பங்களித்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்யும் செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு செயற்பாடுகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவைப்படுகின்ற வளங்கள், தேவையான காலம் இனங்கண்டு கொள்ளப்படாமை.

மேற்படி பலவீனங்கள் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தினை மன்றத்தின் செயலாற்றலை திட்டமிடுவதற்கான பயனளிக்கும் முறைமையாக பயன்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

**4.3 முகாமைத்துவச் சபையினால் மன்றத்தின் செயலாற்றல் கண்காணிப்பிற்கும் மதிப்பாய்விற்கும் உட்படுத்தப்படாமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் உள்ளபடியான செயலாற்றுகை திட்டமிட்டவாறு நிறைவேற்றப்படுகின்றது எனவும் தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மன்றத்தினால் கூட்டுத் திட்டம், பாதீடு மற்றும் செயலாற்றுகை என்பன நாளதுவரையாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

1998 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய ஐஏஐ/98/02, 2011 சனவரி 25 ஆந் திகதிய ஐஏஐ/2011/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் மன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாட்டின் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க முயற்சிகளில் ஓராண்டில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மன்றத்தினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் இரண்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## 4.6 கொள்வனவுகள் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவுகள் முகவராண்மை சுற்றறிக்கையின் 4.21 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்தின் கொள்வனவு நடவடிக்கைகளில் சிக்கனத்தன்மை, செயற்திறன் மற்றும் விளைவுதிறனை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆரம்பகட்ட கொள்வனவு நடவடிக்கையாக பிரதான கொள்வனவுகள் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அன்றாடம் தேவைப்படுகின்ற வழங்கல் மற்றும் சேவைகள் எவ்வித ஆரம்ப திட்டமிடலும் இன்றி பெற்றுக் கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்பாடுகள் அவதானிக்கப் பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மாவட்ட ஊடகவியலாளர் செயலமர்வு மற்றும் டிப்ளோமா பாடநெறியினை நடாத்தல்

(ஆ) முற்பணங்களைத் தீர்த்தல்.